# கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டம்
## ( ESDFP ) - 2007

# மொழித்திறன் விருத்தி

## தரம் - 7


தொகுப்பு :

ஐ. குமரதாசன்

யா / நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

யாழ்ப்பாணம்.

# பழமொழியும் பொருளும்

1. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
**எதுவும் அளவுடன் இருத்தல் வேண்டும்**

2. அச்சாணியில்லாத் தேர் முச்சாணும் ஓடாது
**முக்கியத்தின் உயர்வு**

3. அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும்
**உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுதல்**

4. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
**விடாமுயற்சி**

5. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
**ஒற்றுமையே பலம்**

6. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
**கடமையின் முக்கியத்துவம்**

7. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்
**உத்தம நட்பு**

8. அரைக் காசுக்கு அழிந்த மானம் ஆயிரம்பொன் கொடுத்தாலும் வாராது
**மானத்தில் பெருமை**

9. ஆடமாட்டாதவன் அரங்கு பிழையென்றானாம்
**விடயப் புலமை புலமையின்றி வேறொன்றையும் குறை கூறாதே**

10. ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை
**அற்பனுக்கு மதிப்பு**

11. ஆனையும் அடிசறுக்கும்
**பெரியோரும் தவறலாம்**

12. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
**காலம் மாறி மாறி வரும்**

13. ஆழமறியாது காலை விடாதே
**எதையும் ஆராய்ந்து செய்**

14. ஆழ அமுக்கினாலும் நாழி முகவாது
**கொள்ளக்கூடிய அளவே கொள்ளும்**

15. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
**திருப்தியற்ற மனம்**

16. இளங் கன்று பயமறியாது

**வாலிபத் துணிவு**

17. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து

**இளமையின் சிறப்பு**

18. இறைத்த கிணறே ஊறும், இறையாத கிணறே நாறும்

**தருமத்தின் பெருமை**

19. இட்டுக் கெட்டார் எங்குமில்லை

**தருமம் செய்**

20. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ?

**தகுதிக்குமேல் எண்ணாதே**

21. உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவானேன்

**தன்னிடம் இருக்க பிறரிடம் நாடல் அறிவீனம்**

22. உடையவன் பாரா வேலை ஒருமுழம் கட்டை

**உடையவன் இல்லாக் கருமம் குறைபடுதல்**

23. ஊர் இரண்டுபட்டாற் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

**ஒற்றுமையின்மை**

24. உமி போகுமிடம் பார்ப்பார் உலக்கை போகுமிடம் பாரார்

**சிறு விடயங்களில் கவனமும்**

**பெரிய விடயங்களில் கவனயீனமும்**

25. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு

**வீண் பெருமை**

26. எச்சில் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானா ?

**உலோபி**

27. எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன் ?

**தப்பபிப்பிராயம்**

28. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்

**ஏழ்மையின் வலிமை**

29. ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா ?

**காலம் நில்லாது**

30. ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா ?

**கூட்டு முயற்சி**

31. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**ஒற்றுமை**

32. கங்கையில் முழ்கினாலும் காகம் அன்னமாகுமா ?

**தகுதிக்கு மேல் எண்ணுதல்**

33. கடுகு சிறுது காரம் பெரிது

**சிறிதெனிலும் சிறப்புண்டு**

34. கந்தையானாலும் கசக்கிக் கட்டு

**வறுமையின் செம்மை**

35. கரும்பு தின்னக் கைக் கூலியா ?

**நல்லதைத்தானே விரும்புவர்**

36. காகம் திட்டி மாடு சாகாது

**வீண் பழிக்கு அஞ்சேல்**

37. கிட்டாதாயின் வெட்டென மற

**கிடைக்க முடியாததை விட்டுவிடு**

38. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன் ?

**உலகை அறி**

39. குடிப்பது கூழ் கொப்பழிப்பது பன்னீர

**வீண் பெருமை**

40. குப்பையில் கிடந்தாலும் குன்றிமணி மங்காது

**நற்புகழ் மங்காது**

41. பணம் பந்தியிலே குணம் குப்பையிலே

**பணத்தின் மதிப்பு**

42. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

**மனச்சாட்சி உறுத்தும்**

43. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

**பேராசை**

44. கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு

**புகழ் மங்காது**

45. கெடுவான் கேடு நினைப்பான்

**அழிவு அழிவைத் தேடும்**

46. கைப் புண்ணக்கு கண்ணாடி வேண்டுமா ?

**தெளிவு**

47. கொல்லர் தெருவில் ஊசி விற்கலாமா ?

**இடமறியா மடமை**

48. சாணேற முழம் சறுக்கும்

**உயர்ச்சியை மிஞ்சிய தளர்ச்சி**

49. சிறு துளி பெரு வெள்ளம்

**சிறியதன் பெருமை**

50. சுக துக்கம் சுழல் சக்கரம்

**இன்ப துன்பங்கள் இணை பிரியாதவை**

51. தன் வினை தன்னைச் சுடும்

**வினை விடாது**

52. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்

**பிடிவாதம்**

53. வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்

**செயலும் பயனும்**

54. தீராக் கோபம் போராய் முடியும்

**கோபம் கொடியது**

55. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்

**பழக்கத்தின் வலிமை**

56. நிறைகுடம் தளம்பாது

**அறிவின் அடக்கம்**

57. நெருப்பின்றி புகையில்லை

**காரணமும் காரியமும்**

58. பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்

**பணத்தின் வலிமை**

59. பதறாத காரியம் சிதறாது

**அமைதியின் வெற்றி**

60. பூாத்திரம் அறிந்து பிச்சை இடு

**தகதி கண்டு செய்**

61. புத்திமான் பலவான்

**புத்தியே பலம்**

# உவமைத் தொடர்கள்

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல
2. அடியற்ற மரம் போல
3. அச்சில்லா வண்டி போல
4. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல
5. ஆனைவாய் அகப்பட்ட கரும்பு போல
6. ஆப்பிழுத்த குரங்கு போல
7. ஆற்றங் கரையில் மரம் போல
8. ஆடி ஓய்ந்த 4பம்பரம் போல
9. இணைபிரிந்த அன்றில் போல
10. இருதலைக் கொள்ளி எறும்பு போல
11. உள்ளங்கை நெல்லிக் கனி போல
12. உட்சுவர் இருக்கப் புறச்சுவர் தீட்டுதல் போல
13. உருத்திராட்சப் பூனை போல
14. ஊரணி நீர் நிறைந்தாற் போல
15. எய்தவன் இருக்க அம்பை நோவது போல
16. எரிகிற நெருப்பில் எண்ணைய் ஊற்றியது போல
17. ஒளியைக் கண்ட இருள் போல
18. ஓடும் புளியம்பழமும் போல
19. கடன்பட்டார் நெஞ்சம் போல
20. கண்ணை இமை காப்பது போல
21. கரும்பு தின்னக் கூலி கேட்பது போல
22. கல்மேல் எழுத்துப் போல
23. காகம் உறவு கலந்து உண்பது போல
24. காட்டாற்று வெள்ளம் போல
25. காட்டில் எறித்த நிலாப் போல
26. காட்டுத் தீ போல்
27. கார்த்திகைப் பிறை கண்டது போல
28. காய்த்த மரத்திற் கல்லெறிதல் போல
29. கிணற்றுத் தவளை போல
30. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல
31. கிளியை வளர்த்துப் பூனை வாயிற் கொடுத்தல் போல
32. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல
33. குரங்கின் கைப் பூமாலை போல
34. குருடனுக்குக் குருடன் வழி காட்டல் போல
35. குளிக்கப் போய்ச் சேறு பூசியது போல
36. கூலிக்கு மாரடிப்பது போல
37. சேற்றில் முளைத்த செந்தாமரை போல
38. திரிசங்கு சுவர்க்கம் போல

39. நகமும் சதையும் போல
40. செவிடன் காதில் ஊதிய சங்கு போல
41. நீறு பூத்த நெருப்புப் போல
42. மடைதிறந்த வெள்ளம் போல
43. புறக்குடத்து வார்த்த நீர் போல
44. கீரியும் பாம்பும் போல
45. விழலுக்கு இறைத்த நீர் போல
46. பூவும் மணமும் போல
47. பசுமரத்தாணி போல
48. வைக்கோற் பட்டறை நாய் போல

## இணை மொழிகள்

அகட விகடம்
அங்குமிங்கும்
அல்லும் பகலும்
அரை குறை
அல்லோல கல்லோலம்
ஆதி அந்தம்
ஆடிப் பாடி
ஆடை ஆபரணம்
ஆற அமர
அங்குமிங்கும்
இடை இடை
இல்லாதது பொல்லாதது
இன்னார் இனியார்
ஈவிரக்கம்
ஈவு சோர்வு
உள்ளும் புறமும்
உரட்டுப் புரட்டு
ஏற்ற இறக்கம்
ஏச்சுப் பேச்சு
ஏறக் குறைய
ஏட்டி போட்டி
ஒட்டி உலர்ந்து
ஒளிப்பு மறைப்பு
ஓடி ஆடி
ஓய்வு ஒழிவு
கணக்கு வழக்கு
கங்கு கரை
கண்ணுங் கருத்தும்
கண்டது கடையது
சின்னஞ் சிறிது
எண்ணுமெழுத்தும்

அந்தி சந்தி
இன்ப துன்பம்
ஓட்டமும் நடையும்
ஓட்டை உடைசல்
குறை குற்றம்
பணம் பண்டம்
எதிரும் புதிரும்
செக்கச் சிவந்து
காய்ந்து கறுத்து
கோட்டை கொத்தளம்
கையும் மெய்யும்
கண்ட துண்டம்
கள்ளங் கபடம்
குப்பை கூளம்
மலையும் மடுவும்
வாழ்வு தாழ்வு
வாட்டி வருத்தி
விண்ணும் மண்ணும்
வாடி வதங்கி
உண்டு உடுத்து
பந்த பாசம்
மேடு பள்ளம்
சீரும் சிறப்பும்
உயர்வு தாழ்வு
காரசாரம்
கத்திக் கதறி
ஊரும் பேரும்
எலும்பும் தோலும்
கண்ணும் கருத்தும்
ஊணுடை

## அடுக்கு மொழிகள்

| | | |
|---|---|---|
| கூடிக் கூடி | ஊற்றி ஊற்றி | பாய்த்து பாய்ந்து |
| நடுங்கி நடுங்கி | குனிந்து குனிந்து | கொட்டிக் கொட்டி |
| கோதிக் கோதி | தடவித் தடவி | சுருங்கிச் சுருங்கி |
| பார்த்துப் பார்த்து | வளர்ந்து வளர்ந்து | அளந்து அளந்து |
| தடவித் தடவி | துள்ளித் துள்ளி | மென்று மென்று |
| விம்மி விம்மி | சுற்றிச் சுற்றி | ஓடி ஓடி |
| ஆங்கு ஆங்கு | | |

## இரட்டை மொழிகள்

| | | |
|---|---|---|
| சல சல | பட பட | கல கல |
| சர சர | மட மட | பொலு பொலு |
| குபீர் குபீர் | விறு விறு | குடு குடு |
| பள பள | மள மள | சிடு சிடு |
| நறு நறு | கம கம | குசு குசு |
| கொழு கொழு | சுக்குச் சுக்காக | தளு தளு |
| திரு திரு | பொசு பொசு | மெது மெது |
| கிறு கிறு | சுள் சுள் | தட தட |
| திடு திடு | பொடு பொடு | மினு மினு |

## அடுக்கிடுக்கு மொழி

| | | |
|---|---|---|
| பென்னம் பெரிய | கன்னங் கரிய | நடு நடுங்கி |
| வெட்ட வெளி | அண்ணணித்து | சின்னஞ் சிறிய |
| தன்னந் தனி | பதை பதைத்து | கொதி கொதித்து |
| நெடு நெடுத்து | செக்கச் சிவந்து | |

## மரபுச் சொற்கள்

| பெயர் | ஆண் | பெண் | இளமைப் பெயர் |
|---|---|---|---|
| ஆடு | கடா | மறி | குட்டி |
| மாடு | எருது | பசு | கன்று |
| எருமை | ஏறு | ஆன் | குழவி |
| பூனை | கடுவன் | பெட்டை | குட்டி |
| குதிரை | மா | பெட்டை | குட்டி |
| பன்றி | களிறு | பிணை | குட்டி |
| மான் | கலை | பிணை | குட்டி |
| குரங்கு | கடுவன் | மந்தி | குட்டி |
| யானை | களிறு | பிடி | குழவி - கன்று |
| புலி | ஓருத்தல் | பிணா | குருளை |
| நரி | ஓரி | பாட்டி | பறள் |

## கூட்டத்தைக் குறிக்கும் சொற்கள்

அறிஞர் - அவை
ஆடு - மந்தை
உடு - திரள்
கோழி - ஆயம்
மயில் - குழாம்
ஒளி - கற்றை
மலை - தொடர்
நெல் - குவியல்
பறவை - தொகுதி
புகையிலை - சிற்பம்
மா - தோப்பு
பனை - கூடல்

முகில் - கூட்டம்
வைக்கோல் - கற்றை
மான் - கூட்டம்
முத்து - குவியல்
ஆனை - பந்தி
பல் - வரிசை
ஆ - நிரை
நூல் - பந்து
மலர் - செண்டு
பூ - கொத்து
தென்னை - தோப்பு
கல் - குவியல்

## குரல் வகைகள்

அணில் - கீச்சிடும்
ஆடு - கத்தும்
மாடு - கதறும்
குதிரை - கனைக்கும்
யானை - பிளிறும்
சிங்கம் - கர்ச்சிக்கும்
காகம் - கரையும்
குயில் - கூவும்
மயில் - அகவும்
வண்டு - இரையும்

எருது - முக்காரம் போடும்
ஆந்தை - அலறும்
கரடி - கத்தும்
நரி - ஊளையிடும்
மான் - குய்யும்
குரங்கு - அலம்பும்
பல்லி - சொல்லும்
பசு - கத்தும்
குருவி - கீச்சிடும்
காகம் - கரையும்

## சினைப் பெயர்கள்

இலை - மா, பலா, வாழை
தாள் - நெல், புல், வெங்காயம்
ஓலை - தென்னை, பனை, கமுகு

## பிஞ்சுக்குரிய பெயர்கள்

கச்சல் - வாழை
வடு - மா
நுங்கு - பனை
குரும்பை - தென்னை
முசு - பலா

## உள்ளீடுகள்

அரிசி - நெல், கோதுமை, கம்பு, வரகு
சதை - மா, வாழை
சுளை - பலா, தோடை
பருப்பு - அவரை, உழுந்து

# மரபுத் தொடர்

| | | | |
|---|---|---|---|
| 1. | அமளி செய்தல் | - | குழப்பம் செய்தல் |
| 2. | அள்ளி இறைத்தல் | - | அதிகமாகச் செலவு செய்தல் |
| 3. | அறை கூவுதல் | - | போருக்கு அழைத்தல |
| 4. | ஆழம் பார்த்தல் | - | திறமையை ஆராய்தல் |
| 5. | ஆறப் போடுதல் | - | பிற்போடுதல் |
| 6. | இழுத்துப் பறித்தல் | - | முயன்று செய்தல் |
| 7. | கண் வைத்தல் | - | விருப்பம் கொள்ளல் |
| 8. | கண்ணாயிருத்தல் | - | கவனமாயிருத்தல் |
| 9. | கை குவித்தல் | - | வணங்குதல் |
| 10. | கை கொடுத்தல் | - | உதவுதல் |
| 11. | கை தளர்தல் | - | சோர்தல் |
| 12. | கை தேர்தல் | - | திறமை மிகுதல் |
| 13. | தட்டி விடுதல் | - | உற்சாகப்படுத்தல் |
| 14. | தலை தடவுதல் | - | ஏமாற்றுதல் |
| 15. | தலையால் நடத்தல் | - | நெறிதவறி நடத்தல் |
| 16. | நாக்கு நீளுதல் | - | மிஞ்சிப் பேசுதல் |
| 17. | முகத்திலடித்தல் | - | நேரே நிந்தித்தல் |
| 18. | முடிவு கட்டுதல் | - | தீர்மானித்தல் |
| 19. | வயிற்றைக் கட்டுதல் | - | செலவைச் சுருக்குதல் |
| 20. | ஆழம் பார்த்தல் | - | ஒருவனுடைய அறிவு, மனோநிலை முதலியவற்றை ஆராய்தல் |
| 21. | கரி பூசுதல் | - | அவமானப்படுத்தல் |
| 22. | பூசி மெழுகுதல் | - | செய்த குற்றத்தை மறைக்க முயலுதல் |
| 23. | வத்தி வைத்தல் | - | கோள் சொல்லி சண்டை மூட்டுதல் |
| 24. | கம்பி நீட்டுதல் | - | திருடி ஓடி மறைதல் |
| 25. | புருவம் உயர்த்தல் | - | வியப்படைதல் |
| 26. | கதை கட்டுதல் | - | பொய்ச் செய்தி கிளப்புதல் |
| 27. | கை தூக்குதல் | - | துன்பத்தில் இருந்து காப்பாற்றுதல் |
| 28. | கிள்ளித் தெளித்தல் | - | கொஞ்சம் கொடுத்தல் |
| 29. | கடன் கழித்தல் | - | மனமின்றிச் செய்தல் |
| 30. | தட்டிக் கழித்தல் | - | சாக்குப் போக்குச் சொல்லுதல் |

ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர் ☎ 2223566